10th September 1958]

Sri A. VEDARATHNAM: ஸார், இந்த பசுப் பண்ணைகள் மூல மாக சில மாடுகள் தரத்தில் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அங்கு நல்ல முறையில் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. எனவே, இந்தப் பண்ணை களை இன்னும் அதிகரிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படி யானால் எங்கெங்கு? இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி ஏதேனும் கிடைக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: மத்திய அரசாங்கத்தின் உதவி ஒன்றும் இல்லை. மேலும் விஸ்தரிப்பதில், விஸ்தரிப்பது நல்லது தான், ஆனால் பண நிலைமை குறுக்கே நிற்கிறது.

Sri K. PONNIAN: பொள்ளாச்சி தாலூகாவில் வால்பாரையில் சிந்தி மாடுகள் வளர்க்கப்படுகிறது. பால் வளத்திற்குப் பேர்போன மாடு கள் வால்பாரையில் சிந்தி மாடுகள் அதிகம். அப்பேர்ப்பட்ட மாடுகளுக்கு ஒரு பண்ணை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு தாலூகா விலும் ஒரு பண்ணை ஏற்படுத்துவது சாத்தியமல்ல. அந்த பிராந்தியத்தில் நன்றாகவே மாடுகள் வளர்ந்து வருகின்றன.

Sri M. KALYANASUNDARAM: பள்ளத்தூரில் கால் நடைப் பண்ணைகள் நடப்பதாகச் சொன்னார்கள். ராமநாதபுரம் ஜில்லாவிற்கு அருகேயுள்ள புதுக்கோட்டையில் ஒரு பண்ணை இருக்கும்போது இந்த பள்ளத்தூரில் ஒரு பண்ணை வைக்கக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அந்தப் பண்ணைக்கு வேண் டிய நிலத்தை விலைக்கு வாங்கும் நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. 1,500 ஏக்கர் நிலம், சர்க்கார் நிலம் கிடைத்தது. அதோடு அந்த நிலத்தில் கால்ஷியம் இருக்கிறது. மாடுகளின் தீனிக்கு வேண்டிய கால்ஷியம் இருந்த தால் அது பொறுக்கியெடுக்கப்பட்டது.

Sugar Mills

*147 *Q*.— **Sri P. G. MANICKAM**: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலைகள் எந்தெந்த இடங்களில் நிறுவப்பட்டிருக் கின்றன?

(ஆ) 1958–59-ம் ஆண்டிலே எந்தெந்த இடங்களில் சர்க்கரை ஆலைகள் புதிதாக நிறுவப்படும்?

(இ) சர்க்கரை உற்பத்தியைப் பெருக்குவதற்காக அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) There are sugar factories in the following places in this State—

(i) Nellikuppam, South Arcot district;

(ii) Pugalur, Tiruchirappalli district;

(iii) Pandiarajapuram, Madurai district; and

(iv) Vadapathimangalam, Tanjore district.

(*b*) A new sugar factory at Pottavaithalai in Kulitalai taluk of Tiruchirappalli district is expected to commence production in 1958–59.

(*c*) Licences under the Industries (Development and Regulation) Act, 1951 have been granted by the Government of India for the establishment of six additional sugar factories in this State with a total cane crushing capacity of 5,100 tons per day besides

[10th September 1958

the four already under production. Every possible assistance is being given to the promoters for the early establishment of the factories. The Government have contributed Rs. 10 lakhs to each of the co-operative sugar mills proposed to be started in North Arcot and Coimbatore districts and rupees fifteen lakhs to the co-operative sugar mill to be started in Chingleput district.

MR. SPEAKER : It is now 10 o'clock. At the request of the hon. Member Sri K. Vinayakam I have agreed to take up questions 148, 150-E and 150-F to-morrow. The rest of the questions put down in the agenda for today with the answers to those questions will be printed in the official proceedings unless hon. Members specifically request that they be taken up on some other day.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய 84, 100 எண்ணிட்ட கேள்விகள் இரண்டும் 8—9—58-ல் இந்த சபை முன்பு வைக்கப்பட்டிருந்தன. நான் சபைக்கு வருவதற்கு சிறிது காலதாமதம் ஆகிவிட்டதால் மறுநாள் இவைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று எழுதியிருக்கிறேன். 84-வது கேள்வி வரும் பொழுது, நான் சபையில் இல்லாத காரணத்தால், கேள்வியும் பதிலும் அச்சிடப்படும் என்று தாங்கள் உத்திரவிட்டதாக அறிகிறேன். 100-வது கேள்வியைப் பொறுத்தவரையில், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சபையில் இல்லாத காரணத்தால் மறுநாள் எடுத்துக்கொள்வதாக எழுத்து மூலமாக எனக்குத் தெரிவித்திருக்கிறீர்கள். அதன்படி இன்றைக்கு என் அக்கேள்வி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : எல்லாக் கேள்விகளும் இன்று எடுத்துக்கொள்ளப்பட வில்லை. தொழிலமைச்சர் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள் இன்னும் பாக்கியிருக்கின்றன. அதோடு கூட இந்தக் கேள்வியும் சேர்க்கப்படும். ஆனால் கனம் அங்கத்தினர் 84-வது கேள்வியைப் பற்றி இனி கேட்க முடியாது. அந்தக் கேள்வியையும், அதற்கான பதிலையும் அச்சிடும்படி உத்திரவிட்டுவிட்டேன்.

Cement factory

* 149 *Q.*—SRI K. RAMACHANDRAN AND A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the stage at which the starting of the cement factory at Ramanathapuram stands;

(*b*) the estimated capacity of production in the said factory; and

(*c*) whether it is subsidized by Government and if so, to what extent?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The promoters are taking steps to set up the factory.

(*b*) In the first stage it is proposed to instal a plant with a capacity of 200 tons per day. The capacity will be increased to 600 tons per day in the second stage.

(*c*) There is no subsidy from Government. But Government are subscribing Rs. 10 lakhs for equity shares.